11.11.2025 O.S 480/2020 பி.வா.சா1 சக்திவேலாயுதம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள 8.1.2003 தேதியிட்ட வாடகை ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மெடிக்கல் கடை வைப்பதற்கு அனுமதி பெற்றதற்கான உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றும் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் கிரைய ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். 6.8.2012 ம் தேதியிட்ட அடமானம் சம்பந்தமாக ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவைப்பட்டால் தாக்கல் செய்யதயாராக உள்ளேன். 11.11.2017 தேதியிட்ட செல் அடித்தற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவைப்பட்டால் தாக்கல் செய்யதயாராக உள்ளேன். அதே தேதியில் ரூ.4 லட்சம் கொடுத்தற்கான எதுவும் தாக்கல் செய்ய வில்லை என்றால் என்னிடம் உள்ளது. தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். 18.1.2019 தேதியிட்ட நவநீதகிருஷ்ணன் பெயருக்கு கொடுக்கப்பட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னிடம் உள்ளது. தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். 11.08.2019 தேதியிட்ட செல் அடித்தற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னிடம் உள்ளது. தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக

உள்ளேன். எழுதி கொடுத்த அடமானத்தின் அனுபவம் என்னிடம் உள்ளது என்றும், அதற்கான வட்டி கேட்கிறேன் என்றால் அவ்வாறு தான் சொல்லப்பட்டுள்ளது. 2003ம் ஆண்டில் இருந்து அந்த இடத்தின் அனுபவம் இதுவரை என்னிடம் தான் உள்ளது என்றால் 2003ம் ஆண்டில் மெடிக்கல் ஸ்டோர் வைத்து என்னிடம் தான் அனுபவம் உள்ளது. 2012ல் இருந்து 2019 வரை சொத்திற்கான அனுபவம் என்னிடம் இருந்தது என்றும் அதற்கான ஆவணம் கொடுக்கப்படவில்லை என்றால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். அடமானத்திற்கான சொத்தினை பொறுத்து வட்டிக்காக பெற்றேனா என்றால் இல்லை. கடையை நடத்துவதற்காக பெற்றேன். நான் வட்டி ஏதேனும் பெற்றேனா என்றால் இல்லை. நான் வாடகை செலுத்தியதாக எந்த ஒரு ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.